நகல்

யுவ மாசி [29.3.1876] ஆறுமுகநாவலர்.

நகல் — 1

ஆறுமுகநாவலரவர்கள் மாசி 29ம்

உ

சிவ மயம்.

ஸ்ரீ சிதம்பர சபாநாயகர் திருவருளினாலே செல்வ
சிரஞ்சீவி தம்பி சிதம்பர பிள்ளைக்குச் சர்வாபீட்ட சித்தி
யெய்துக.

தாம் எழுதியனுப்பிய கடிதம் பெற்று வாசித்து
சகிக்கலாற்றாத் துக்கமுற்று யாக்கைநிலையாமையை நினைந்
ஒருவாறு தெளிந்தேன். தம்முடைய தந்தையாராகிய
ம-ள-ள. ஸ்ரீ பிள்ளையவர்கள் தமிழ்வழங்கு நிலமெங்கும்
உலகமழியுங்காறும் தங்கள் புகழுடம்பை நிறுத்திவிட்டுச்
சென்றமையே தமக்கு வாய்த்ததொரு பெரும் பாக்கியம்! இ
ன்னுஞ் சிலகாலம் இருப்பார்களாயின், இன்னுஞ் சில கா
யங்கள் அவர்களாற் செயப்பட்டு விளங்கும். "வினை தா
னெழுந்தாற் — றினைப்போதளவு நில்லாது" என்னுந் திருவாக்
கை நினைந்து, அவர்களருமையை யறிந்தோர் யாவருந்
தங்கள் துக்கத்தை யாற்றிக் கொள்வதே தகுதி.

தாம், தம்முடைய தந்தையாரவர்களைப் பரிபாவித்து
அவர்களுடைய கீர்த்தியை வெளிப்படுத்தியருளிய பெருங்
கருணை வெள்ளமாகிய திருவாவடுதுறை மகா சந்நிதானத்
திருவடிகளை மறவாத சிந்தையும், தம்முடைய தந்தை
யாரவர்களிடத்து மெய்யன்புடைய மாணாக்கர்களைச் சகோ
தரர்களாகவே கொண்டொழுகு நேசமும், எவரும் நன்கு மதி
க்கற்பாலதாகிய நல்லொழுக்கமும் உடையராய், இனிது
வாழ்ந்திருக்கும்படி, திருவருள் சுரக்கும்பொருட்டு ஸ்ரீசித
ம்பர சபாநாயகர் திருவடியைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
ஆறுமுகநாவலர்

யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை
யுவ ௵ மாசி௴ ௰௯உ

நகல்

ஆறுமுக நாவலர்

29.3.1876

யாழ்ப்பாணம்

யுவ - மாசி 19

29.3.1876.